# உதித்தெழு

## திருமதி இராஜலக்ஷ்மி ஆசைத்தம்பி

சுவர் இல்லாத ஒரு உலகில்
எங்கு நோக்கினும் சித்திரங்கள்!
எண்ணிப்பார்க்க இயலவில்லை.

நிலம் எங்கும் நிறங்களை
அள்ளி அருந்திய
ஓவியங்கள். ஓடிக் கிடக்கிறது
ஒவ்வோர் வீட்டின் முன்னும்.
சித்திரமா பெரிது... அதில்
அழகாக அரங்கேறும்
செம்மண்ணால் செய்த
விறகுகடுப்பும் அதனினும் மேல்
அமர்ந்திருக்கும் பானைகளும்
அதனை அழகாக அலங்கரித்த
மஞ்சள் கிழங்கும், மணக்கும் பொட்டும்.
அதற்குள் இறங்கி தட புடலாக
ஆட்டம் ஆட பலரும் காத்திருக்க!
குளிர்ந்த நீர், கொதிக்க தயார்!
பெண்கள் கட்டளைக்காக
நெல் மணிகள் குதிக்க தயார்!
பச்சரிசி புன்னகையுடன்
பசும் பாலைத்தேட, பனை வெல்லம் பாகென உருக,
உண்டென்று என்னையும் சேர்த்துக்கொள்
வழிகிறது, பசும் நெய் !
எனை எப்போது எடுப்பார் போல்
ஏங்குகிறது ஏலம் .. எல்லாமும் சேர்ந்து ,
தம் உயிரையே உணவாக
திகட்ட திகட்ட திங்களுக்காக
விருந்தோம்பல் விளம்ப...
பொங்கலோ பொங்கலென
பொங்கிக் கொட்ட காத்திருக்க!!
காலைக் கதிரவனும்
கண் விழிக்கிறான்...
கணக்குப் பார்க்க!
அறுவடைத் திருநாள்
இவ்வாண்டு எப்படி?

வரவும் செலவும்
வந்து பார்த்தான்.
வாய் நிறைய
உண்டும் மகிழ்ந்தும்
அசர்ந்தும் சென்றான்.

வருவது யாவும் போகும்
கிடைப்பது யாவும் தொலையும்
வாழும் நம் வாழ்க்கை
ஒன்றே நிதர்சனம்.

வந்தவை போனவை
கிடைத்தவை தொலைத்தவை.
எல்லாவற்றுக்கும் முற்பட்டது
வாழ்வெனும் நிதர்சனம்.
கவலைகளால் உறைந்தாலும்.
மீண்டும் உதித்து எழு.
என்னைப் போல்.
ஒவ்வொரு நாளும்
உனக்கானது தான்
சொல்லிச் சென்றான், அவன்.,
சிறந்த சேயோன்!



கோயம்புத்தூரில் பிறந்து வளர்ந்தவர்.ஆங்கில இலக்கியத்திலும் செய்தி தொடர்பியலிலும் இளங்கலை முதுகலை தேர்ச்சி பெற்ற பின், வேளாண்மை விஞ்ஞானி ஆசைத்தம்பியுடன் இல்லறத்தால் இணைந்து பதிநான்கு வருட காலமாக தோக்கியோவில் வாழ்ந்து வருகிறார். தமிழ் மொழியின் மீதும் கவிதைகள் மீதும் ஆர்வம் கொண்டவர். 2023 நவம்பர் மாதம் துவங்கிய ஜப்பான் மக்கள் சிந்தனைப் பேரவையின் துணைத்தலைவராக பொறுப்பேற்று, 2023 டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த பாரதி விழாவினை தொகுத்து வழங்கியவர்

# உதய கன்னி

மகளாக தோன்றி
தங்கையாக விளையாடி
தமக்கையாக உறவுகளுடன்
உரையாடி, மாணவியாக வளர்ந்து மனைவியாக மனதிலும்
அவன் மனை யிலும் புகுந்து
மறுமகளுமாகி மாசிலா
பிள்ளைகளுக்கு அன்னையுமாகி, முக்காலமும் முன் மாதிரியாக
அத்தையும் அண்ணியுமாகி
ஓரகத்தி, சித்தி என்றும்...
பெரியம்மா, பாட்டி என்றும்
மச்சினிச்சி, கொழுந்தியாள்
நாத்தனார், மாமியார் என்றும்
பேத்தியாக பாலாம்பிகையாக
ஒவ்வொருவருக்கும்
ஒரு பாத்திரமாக., பாத்திரத்தின் உருவமேற்ற நீராக.
அன்றாட வேலைகளின்
நடுவே அழுத்துக்கொல்லாமல்...
இத்துணை பட்டங்களும்
கௌரவங்களும் சுமப்பது
சுகம் தான் என்று ஏற்று. ,
கிருஹலக்ஷ்மிகளாய் மட்டும்
நாட்களை கடத்தாமல்
ஆசிரியை முதல்
அமைச்சர் வரை
பல துறைகளிலும்
அலுவல் பார்த்து
பதவிகளோடு பிரகாசித்து
அறம் ஆற்றும்
பெண்மையை போற்ற,
ஒரே ஒரு தினமா!
சிந்தியுங்கள்... அவளை, அனுதினமும்
தோழிக்கு தோள் கொடுக்கும்
உற்ற தோழனாக,
அர்த்தநாரீஸ்வரர்களாக,
சிவசக்தி ஸ்வரூபத்தை
சிந்தையில் வைத்து,
போற்றலாம் வாருங்கள்!
அவனின்றி
ஓர் அணுவும் அசையாது
அவளின்றி
ஆண் பிறவி கிடையாது.

